# சுத்திரம்

www.sooddram.com

The Formula

செய்திகள் | கட்டுரைகள் | வடக்கு கிழக்கு மாகாணத்தில் | எழுத்துரு | Contact us at: sooddram@gmail.com

~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~

**சூத்திரம்**
- முதற்பக்கம்
- FONTS/எழுத்துரு
- சர்வதேச நேரம்
- தொடர்புகளுக்கு

**கட்டுரைகள்**
- பொதுவிடயம்
- அரசியல் சமூக ஆய்வு
- இலங்கைத் தமிழர் போராட்டம்
- இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
- சர்வ தேச அரசியல்
- அரசியல் தீர்வு

**கவிதைகள்**
- சமூக விழிப்பு
- போராட்டம்
- பொது விடயம்

**புகைப்படங்கள்**
- எமது வாழ் நிலங்கள்
- போராட்டங்கள்
- போராட்ட தடயங்கள்

**இணையத்தளங்கள்**
- கண்ணோட்டம்
- பூந்தளிர்
- தூ
- தேனி

## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 24)*

(கிறேசியன், நாவாந்துறை)

தொடர்ந்து கேள்வி கேட்டால் இவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைத்துக் கொண்டு நடராஜ் அவர்கள் விடாமல் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தார். நாங்கள் இருந்த வீட்டின் ஹோலின் வாசலில் நடராஜ் அவர்களை இருக்கும்படி பணித்திருந்தனர். அவர் வாசலில் இருக்கும் போது எந்தப் புலி விலங்கு உள்ளே வந்தாலும் முதலில் அவரைத்தான் அடிப்பார்கள். அனைவருக்கும் அடித்து முடித்துவிட்டு வெளியில் செல்லும் போது மீண்டும் அவரை அடித்துவிட்டுத்தான் செல்வார்கள்.

எதற்காக அவரை மட்டும் திரும்பத் திரும்ப அடிக்கின்றனர் என்று பார்த்தால், அவர் ஒருவர்தான் எதிர்த்துக் கேள்வி கேட்பவர், அதிலும் தூசண வார்த்தைகளைப் பேசிக் கேள்வி கேட்பவர். தூசண வார்த்தைகளைப் பேசும் உரிமை புலி விலங்குகளுக்கு உண்டு என்று புலிகள் நினைத்துள்ளனர் போலும். அதனால் நடராஜ் அவர்களின் ஏச்சுகள், அவர்களது உரிமை மீது ஆதிக்கம் செலுத்துவதாகக் கண்டு வரும்போதெல்லாம் அவரைத் தாக்கினர்.

புதிதாக வந்தவர்களில் யோன்சனும் ஒருவர். இவர் ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் சென்மேரீஸ் வீதியைச் சேர்ந்தவர். சிறந்த உதைப்பந்தாட்ட வீரர். இவரை முன்னரே பிடித்து பிறிதொரு முகாமில் வைத்து சித்திரவதை செய்துள்ளனர். இதனால் இவரது இருகைகளும்

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**“அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

செயலிழந்து இருந்தன. இரண்டு கைவிரல்களையும் மேசை மீது வைத்து அதன் மீது கட்டைகளால் அடித்துள்ளனர். இதனால் விரல்கள் அனைத்திலும் உடைவுகள் ஏற்பட்டு அவற்றினை மடக்க முடியாமலும், பயன்படுத்த முடியாமலும் அவதிப்பட்டு வந்தார். காலைக்கடன் கழித்து அதை சுத்தம் செய்ய முடியாமல் அவதிப்பட்டார். அவருடன் செல்பவர்கள்தான் அந்தப்பணியைச் செய்து விட்டனர்.

வழங்கப்படும் உணவை அவரால் எடுத்து உண்ண முடியாது. எனக்கு சந்தர்பம் கிடைக்கும் போதெல்லாம் உணவைக் குழைத்து அவரது கைகளில் வைப்பேன் அவர் அதனை உண்ணுவார். ஏனைய நேரங்களில் மற்றவர்கள் இப்பணியைச் செய்துவிடுவர்.

என்னிடம் என்னக் கேள்வி கேட்டனரோ அதே கேள்வியைத்தான் இங்கிருக்கும் அனைவரிடத்திலும் கேட்டு விசாரிப்பார்களாம். ஜோன்சனிடமும் இதே கேள்விகள்தான் கேட்கப்பட்டனவென்று அவர் சொன்னார்! ஓங்கொம்மாவை கூட்டிக்குடுத்தியா? கொக்காவைக் கூட்டிக் குடுத்தியா? ஆயுதங்கள் எங்கே வைத்திருக்கிறாய்? அடிதாங்க முடியாமல் அனைத்தையும் ஏற்றுக் கொள்வாராம் ஜோன்சன். அடித்து முடிந்ததும், ஆ, சொல்லு சொல்லு என்று கேட்டார்களாம் புலிகள். என்னத்தைச் சொல்கிறது! ஏதும் இருந்தால்தானே சொல்வதற்கு என்று ஜோன்சன் கேட்பாராம். என்னடா சொல்கிறாய் என்று மீண்டும் அடிப்பார்களாம் விலங்குகள்.

அடியின் வலியால் செய்யாததைக் கூட செய்தேன் என்று சொல்வார்களா, என்று நான் ஆச்சரியப்பட்டேன்! எனக்கும் இந்த நிலை ஏற்படும் என்று நான் அப்போது அறிந்திருக்கவில்லை! ஜோன்சன் சில மாதங்களில் காந்தியின் இறச்சிக்கடைக்கு அனுப்பப்பட்டார். அங்கும் சில மாதங்கள் சித்திரவதையை அனுபவித்த அவர், தன் உறவினரது தொல்லையால் புலி விலங்குகள் அவரை விடுவித்தனர். அவர் இப்போது ஐரோப்பாவில் இருக்கிறார் என்று அறிந்து மகிழ்ந்தேன். ஏனெனில் இறச்சிக் கடைக்குச் சென்ற யாரும் உயிருடன் வெளியில் வந்தது இல்லை என்று பலரும் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படி வெளியில் வந்தவர்களில் ஜோன்சனும் ஒருவர். ஜோன்சன் அவரது கைவிரல்களுக்கு ஐரோப்பாவில் மருத்துவம் செய்து ஓரளவு குணப்படுத்திக் கொண்டதாகவும் கேள்விப்பட்டேன்.

எனது அறையில் ஜெகோவா பாலன் என்றொரு சகோதரர் இருந்தார். இவர் கிளிநொச்சி அரசு மருத்துவமனையில் பணியாற்றியவர். சிறந்த சமூக சேவகர். மருத்துவமனைக்கு வரும் நோயாளர் முதல்கொண்டு அவசர உதவிக்கான அனைத்துப் பணிகளையும் தானே முன்நின்று செய்வார். எக்காளத் தொனி (Trunpet Sound) என்னும்

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………"

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

***[இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!](#)***
[நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?](#)

கிறிஸ்துவ ஆலயத்தின் பகுதி நேர ஊழியருமாவார். கிளிநொச்சி அரசு மருத்துவமனையின் மருந்துப் பிரிவில் பணியாற்றும் ஓடலி இவரது பணியாகும்.

நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் யாராவது மரணித்தால் மருத்துவமனையின் சட்டநடவடிக்கைகள் உட்பட அனைத்தையும பாலனே முன்நின்று முடித்து அந்த உடல் உறவினரது வீடுபோய்ச் சேரும் வரை இவர் தனது வீட்டுக்குப் போகமாட்டார். இது கடவுளுக்கான பணிவிடை, எனது ஆலயத்தின் வேண்டுதலால் இவற்றை நான் செய்கிறேன் என்றும் விளக்கம் கூறுவார்.

கிளிநொச்சி மருத்துவமனையின் எதிரில் ஈ.என்.டி.எல்.எப். முகாம் இருந்தபடியால் உனக்கும் அவர்களுக்கும் என்ன தொடர்பு என்று விசாரிக்க வரும்படி அழைத்து பலதரப்பட்ட சித்திரவதைகளைச் சந்தித்து இருபாலை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார்.

தினமும் அவர் முழங்காலில் நின்று வழிபடுவார். இங்கிருக்கும் அனைவருக்கும் விடுதலை கிடைக்க வேண்டும், புலிகள் தங்களை அறியாமல் பல தவறுகளைச் செய்கின்றனர். அவர்களையும் நீர் மன்னிக்க வேண்டும், அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும் ஆண்டவரே! சின்னகேடியும், திசையும், பாபுவும் அடிக்கும் போது வலி ஏற்படாமல் இருக்க ஆண்டவரே நீர் உதவி செய்வீராக! வலதுகுறைந்த நடராஜ் அவர்களை இவர்கள் மிருகத்தனமாகத் தாக்குகின்றனர், அவருக்கு வலிக்காமல் இருப்பதற்கும் , விடுதலை அடைவதற்கும் நீர்தான் வழி செய்ய வேண்டும் ஆண்டவரே! பல இடங்களில் சித்திரவதை முகாம் வைத்து எங்கட பெடியன்களை கொடுமைப்படுத்துகின்றனர் ஆண்டவரே! இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்தும் ஆண்டவரே! புலிகளுக்கு படிப்பினை ஒன்றினை புகட்டும் ஆண்டவரே என்று தினமும் ஜெகோவா பாலன் இறைவனிடத்து தினமும் வேண்டிக்கொள்வார்!

என்னைப் பார்த்து ஒரு நாள் கூறினார், கிரேசியன், நீங்கள் இந்த முகாமிலிருந்து விடுதலை அடைவீர்கள், பல கசப்பான அனுபவங்களுடன் உங்களுக்கு விடுதலை கிடைக்கும், ஆனால் நான் இறச்சிக்கடைக்கு போகவேண்டி ஏற்படும். சிலவேளை உயிருடன் திரும்புவேன், சிலசமயம் உயிருடன் திரும்பாமலும் போகலாம், எல்லாம் இறைவனது கைகளில் என்று கூறினார். எப்படி இவ்வளவு திடமாகச் சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எனது உள்ளுணர்வு சொல்கிறது என்றார்.

பாலனது கால்களில் போடப்பட்டிருந்த சங்கிலியின் பூட்டுக்கள் துருப்பிடித்து இருந்ததால் அவரது கால்களில் உரசி புண் ஏற்பட்டிருந்தது. அந்தப் பூட்டை மாற்றும்படி பலதடவைகள் கேட்டும்

(சாகரன்)

வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம்

*- பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*"ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்."*
**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

'இராணுவ' ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

அவர்கள் மாற்றவில்லை! இதனால் பாலன் பெரும் அவஸ்தைபட்டு வந்தார். அவர் சொல்லியபடி நான்கு மாதங்களில் அவரை இறச்சிக்கடைக்குக் கொண்டு சென்றுவிட்டனர் புலிவிலங்குகள். புறப்படும் போது என்னிடம் வந்து கூறினார், நான் போகிறேன் உயிருடன் திரும்பினால் உங்களை வந்து சந்திப்பேன். செத்துப்போனால் என்னுடைய வீட்டுக்குப் போய் ஆறுதல் சொல்லிவிடுங்கள், ஆண்டவர் அவர்களைக் காப்பாற்றுவார் என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார் பாலன்!

1995 ஆண்டு யாழ்ப்பாண வெளியேற்றத்தின் போது நானும் கிளிநொச்சி சென்றிருந்தேன். வட்டக்கச்சி கட்சன் றோட்டில் இருந்த ஜெப ஆலயத்தின் அருகில் ஜெகோவா பாலனைச் சந்தித்தேன். கட்டித் தழுவிக் கண்கலங்கினார். இறச்சிக் கடையில் இரண்டு வருடங்கள் இருந்ததாகச் சொன்னார் அவர். தான் அவர்களிடத்தில் பட்ட கொடுமைகளை விபரித்தார்.

சாவகச்சேரி இறச்சிக் கடைக்குக் கொண்டு சென்றதும் பாலன் தனிமைப்படுத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். முள்ளுக் கம்பிகளால் வேலி போன்று அமைக்கப்பட்டு அதன் நடுவில் இரண்டு நாடகளாக நிறுத்திவைக்கப்பட்டார் பாலன். அந்த முள்ளுக்கம்பிகளுக்குள் நிற்க மட்டுமே முடியும், இருக்கவோ படுக்கவோ முடியாது. இரண்டு நாட்கள் வெய்யிலில் இது போன்று நின்றுள்ளார் பாலன்.

முதல்நாள் தாக்குப்பிடித்த பாலனால் இரண்டாம் நாள் தாக்குப்பிடிக்க முடியவில்லை. முள்ளுக்கம்பியின் மீது சாய்ந்து உறங்கிவிட்டார். இதனால் முள்ளுக்கம்பி கழுத்திலும் வயிறு, மற்றும் நெஞ்சிலும் குத்திக் கிழித்துள்ளது. அதிலிருந்து விடுபட்டப்பின்னர், அவரது கைகளை விலங்குகளினால் இணைத்து அதில் கயிற்றைக் கட்டி அக்கயிற்றை கிணற்றின் கம்பியில் போட்டு மூன்று பேர் சேர்ந்து இழுத்து கிணற்றிலுள்ளே இறக்கியுள்ளனர்.

கிணற்றினுள் இருந்த தண்ணீரிலிருந்து சுமார் மூன்று அடிக்கு மேலாக இவரைத் தொங்கவிட்டுள்ளனர். நான்கு மணி நேரத்துக்குப் பின்னர் வந்த விலங்குகள், சொல்லு எங்கே ஆயுதங்களை வைத்துள்ளாய்? என்று கேட்டுள்ளனர். இவரால் வாய்திறந்து பதில் சொல்ல முடியாத மயக்க நிலையை அடைந்தபடியால் கயிற்றை இழுத்து மேலே கொண்டுவந்தனர். இரண்டு நாட்கள் காலிலும் கைகளிலும் விலங்குடன் விடப்பட்ட இவரை மீண்டும் விசாரணைக்காக அழைத்து தென்னம்மட்டை, ஒஸ்லோன் பைப் போன்றவற்றால் முதுகில் அடித்தனர் என்று கூறிய பாலன் தனது சேட்டைக் கழற்றி முதுகைக் காண்பித்தார். அவரது முதுகில் காயங்கள் ஏற்பட்டு அவை ரணமாகிய தழும்புகள் தடித்துத் தடித்திருந்தன. நீளம் நீளமாக


**ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

*தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு*

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?**

(மோகன்)

**2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!**

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

(யஹியா வாஸித்)

முப்பதுக்கும் மேற்பட்ட தழும்புகள் புடைத்துக்கொண்டு நின்றன.

(தொடரும்...)

**கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

*தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை*

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

**கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்**

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

*தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு*

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும் - சாகரன்

*அடுத்த கட்டமான*

[*அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*]

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

[வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?] - சாகரன்

[*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!*] - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com